**NAGAMALAI PUDUKOTTAI BRANCH**
D.No.5/161,Theni Main Road,
Nagamalai Pudukottai,
Madurai – 625 019.
Ph:0452 - 2458423
Mobile:98652 59693
EmailId:nagamalaipudukottai@tmbank.in
CIN No: L65110TN1921PLC001908

Tamilnad Mercantile Bank Ltd
Be a step ahead in life

## ஏல விற்பனை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிசொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 8(6) மற்றும் 9(1) -ன் கீழ் வங்கியிடம் அடமானத்தில் உள்ள அசையா சொத்தின் விற்பனை:

இதனால் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்/பங்குதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் **நாகமலை புதுக்கோட்டை** கிளையில் அடமானமாக வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்து மேற்படி வங்கியின் மதுரை மண்டலத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கையகப்படுத்தப்பட்டு "உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ள நிலையில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் **கடன்தாரர்கள் திரு.V.ஜெகன், த/பெ.C.விருமாண்டி,** கதவு எண். 3/179A, புதிய எண். 3/177, பல்கலை நகர், நாகமலை புதூர். வடபழஞ்சி கிராமம். மதுரை - 625 021 மற்றும் **திரு.V.அன்னலெட்சுமி. க/பெ.C.விருமாண்டி,** கதவு எண். 3/179A, புதிய எண். 3/177, பல்கலை நகர், நாகமலை புதூர். வடபழஞ்சி கிராமம், மதுரை - 625021 ஆகியோரிடமிருந்து எங்களது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, **நாகமலை புதுக்கோட்டை** கிளைக்கு வரவேண்டிய பாக்கி தொகை **ரூ.20,68,636.40-யும் 14.10.2023** முதல் வட்டி மற்றும் செலவு தொகையை சேர்த்து வசூல் செய்வதற்காக **10.11.2023** அன்று பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது. ஏல நிர்ணயத்தொகை **ரூ.78,20,000/-** மற்றும் முன்வைப்புத் தொகை **ரூ.7,82,000/-.**

### ஏலவிபரம்

மேலே சொல்லப்பட்டுள்ள நபர் 14.10.2023 வரை செலுத்த வேண்டிய பாக்கித்தொகை **ரூ.20,68,636.40 (ரூபாய்** இருபது லட்சத்து அறுபத்தி எட்டாயிரத்து அறுநூற்றி முப்பத்தி ஆறு மற்றும் பைசா நாற்பது மட்டும்**)** யும் மற்றும் அதன் பின்வரும் வட்டி, செலவுத்தொகைக்காகவும் சேர்த்து கீழே குறிப்பிட்டுள்ள சொத்து **10.11.2023** அன்று பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| | |
|---|---|
| **ஏலம் நடைபெறும் இடம்:** | **தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்,**<br>நாகமலை புதுக்கோட்டை கிளை<br>கதவு எண். 5/161, தேனி மெயின் ரோடு, மதுரை -625019.<br>**தொலைபேசி: 0452-2458423, செல்: 98652 59693** |

### அசையா சொத்தின் விபரம்

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு பதிவு மாவட்டம், திருப்பரங்குன்றம் துணைப்பதிவு மாவட்டம், மதுரை தெற்குத் தாலுகா, தற்போது மேற்குத் தாலுகா, வடபழஞ்சி கிராமம். பட்டா எண். 233, புஞ்சை சர்வே எண். 126-B/4C2Gல் ஏர்ஸ் 0.04.0ல் செண்டு 10-க்கு தற்போது ஸ்தலத்தில் உள்ளபடி ஏர்ஸ் 0.03.08க்கு மொத்தம் சதுரடி 4093 உள்ள மனையிடத்தில் வடபுறம் சதுரடி - 2738 நீக்கி தென்புறம் 1355 உள்ள மனையிடமும், மேற்படி கிராம் பட்டா எண்.893ல் கண்ட சர்வே எண்.126B/19-ல் ஏர்ஸ்.0.03.0-க்கு செண்டு 7 1/2ல் கீழ்புறம் செண்டு 5-க்கு சதுரடி 2180 உள்ள மனையிடமும், மேற்படி கிராம சர்வே எண். 126B/4C2H1ல் ஏர்ஸ் 0.04.0க்கு செண்டு 10-ல் வடபுறம் தற்போது ஸ்தலத்தில் உள்ளபடி சதுரடி 1778 ஒரு பகுதியில் உள்ள மனையிடமும் சேர்த்து மொத்தம் சதுரடி 5313 உள்ள மனையிடமும். மேற்படி மனையிடத்தில் உள்ள கட்டிடம் வகையறா மேற்படி கிராம கணக்கின் வீட்டு வரி ரசீதின்படி வடபழஞ்சி நாகமலை புதூர், வரிவிதிப்பு எண். 1077க்கு டோர் எண்.3/178ல் கட்டுப்பட்ட மேற்படி மனைவீடும் மற்றும் காலியிடம் சேர்ந்துள்ளதற்கு நான்குமால் அடியளவு விபரம்

**எல்லை:**
வடக்கு: ஜெயக்கொடி அவர்களது சொத்து
கிழக்கு: வடபழஞ்சி ரோடு
தெற்கு: பாண்டி அவர்களது சொத்து
மேற்கு: சர்வே எண். 126B/18, 126B/19 & 126B/20ல் மேல்பகுதி மனையிடம்

இதற்குள்பட்ட கிழமேல் ஜாதியடி வடபுறம் 125 அடி தென்புறம் 125 அடி தென்வடல் ஜாதியடி கீழ்புறம் 44 அடி மேல்புறம் 41 அடிக்கு கூடியது சதுரடி 5313 உள்ள மனையிடமும், மேற்படி மனையிடத்தில் உள்ள கட்டிடமும் மற்றும் அதன் சமஸ்தமும். மேற்படி சொத்து கிராம சர்வே எண். 1268/4C2Gல் பார்ட் ஏர்ஸ் 0.02.57லும், சர்வே எண். 1268/19ல் பார்ட் ஏர்ஸ் 0.02.0லும், சர்வே எண். 126B/4C2H-ல் பார்ட் ஏர்ஸ் 0.01.69லும் கட்டுப்பட்டது.

மேற்படி சொத்து **திரு.V.ஜெகன், த/பெ.C.விருமாண்டி** என்பவரின் பெயரில் உள்ளது.

| | |
|---|---|
| **ஏலம் நடைபெறும் தேதியும், நேரமும்:** | **10.11.2023 & காலை 11.00 மணி** |

**நிபந்தனைகள்:**

1. ஏலம் கேட்பவர்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையில் 10% தொகையை வைப்பீட்டுத் தொகையை தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், பெயருக்கு நாகமலை புதுக்கோட்டை கிளையில் டிமாண்ட் டிராப்ட் மூலமாக **10.11.2023 அன்று** முற்பகல் **10.30** மணிக்கு முன்பதாக செலுத்த வேண்டும்.

2. மேற்படி சொத்தை காலை ஏலம் நடைபெறுவதற்கு முன்னர் காலை 10 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரையிலும் கிளை மேலாளர், தமிழ்நாடு மெர்கன்டைல் பேங்க் லிமிடெட், நாகமலை புதுக்கோட்டை கிளை (தொலைபேசி: 0452-2458423; செல்: 98652-59693) அவர்களுக்கு முன் கூட்டியே தகவல் தெரிவித்து நேரம் ஒதுக்கி பார்வையிட்டு கொள்ளலாம்.
3. ஏலம் எடுத்த நபர்கள் ஏலம் எடுத்தவுடன் ஏல தொகையில் 25% தொகையை (EMD சேர்த்து) உடனடியாக அல்லது மறு நாள் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் வைப்பீட்டு தொகை திரும்ப தரப்பட பாட்டாது மற்றும் வைப்பீட்டு தொகை முழுவதுமாக இழக்க நேரிடும் மற்றும் இந்த சொத்து பொது ஏலம் மூலம் மறுவிற்பனை செய்யப்படும்.
4. ஏலத்தில் வெற்றி பெற்றவர் ஏல தொகையில் மீதம் உள்ள 75% தொகையை விற்பனை முடிந்த 15 நாட்களுக்குள் அல்லது அங்கீகாரம் பெற்ற அதிகாரி உடன் ஏற்ப்பட்ட உடன்படிக்கை அல்லது விரிவாக்கப்பட்ட கால அளவிற்குள் செலுத்த வேண்டும். ஏலத்தில் வெற்றி பெற்றவர் குறிப்பிட்ட கால அளவிற்குள் மீதமுள்ள தொகையை செலுத்த தவறினால் செக்யூரிட்டி இண்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதி 2002 (9) துணை விதி (5)- ன் படி வைப்பீட்டு தொகை திருப்ப தரப்படமாட்டாது. மேலும் சொத்து மறுஏலத்தில் விற்பனை செய்யப்படுவதுடன் முழு ஏல தொகை செலுத்தாத நபர் மேற்படி சொத்தில் எந்த வித கோரிக்கையையும் பெற தகுதியற்றவர் ஆகிறார்.
5. SARFAESI சட்டத்தின் கீழ் ஏலத்தில் பங்கு கொள்ள கட்டிய வைப்பீட்டிற்கு கண்டிப்பாக வட்டி தாப்படமாட்டாது.
6. அங்கீகாரம் பெற்ற அதிகாரி அறிந்தவகையில் மற்றும் தெரிந்த தகவல்களின் படி, ஏலம் விடும் சொத்தின் பெயரில் எந்த வில்லங்கமும் இல்லை. விற்பனைக்காக உள்ள சொத்தின் மீது ஏதேனும் கட்டணங்கள், பாத்தியதைகள், வில்லங்கங்கள், சொத்து வரி அல்லது அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைகள் இருந்தால் அதற்கு அங்கீகாரம் பெற்ற அதிகாரி பொறுப்பேர்க்கமாட்டார்.
7. ஏலம் எடுக்கும் நபர் சட்டத்தின் படி பொருந்தக்கூடிய பதிவுக்கட்டணம், முத்திரை கட்டணம் போன்ற செலவுகளை அவரே ஏற்று கொள்ள வேண்டியது.
8. அங்கீகாரம் பெற்ற அதிகாரிக்கு எந்த காரணமும் கூறாமல் ஏலத்தை ஏற்று கொள்ளவோ/ நிராகரிக்கவோ/ மாற்றி வைக்கவோ அல்லது ரத்து செய்ய முழு அதிகாரம் உண்டு. விருப்பமுள்ள விலைப்புள்ளிதாரரின் ஏலப்படிவம் ஒழுங்காக இல்லாவிடில் அதை நிராகரிக்க அங்கீகாரம் பெற்ற அதிகாரிக்கு உரிமை உண்டு.
9. ஏலம் விற்பனைக்கான சொத்துக்கள் மேற்படி நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலைக்கு குறைவாக விற்கப்படமாட்டாது. மேற்படி சொத்துக்கள் "உள்ளது. உள்ளபடி நிலையில்" விடப்படும்.
10. ஏலம் கேட்பவர்கள் தங்களது ஒரிஜினல் அடையாள அட்டையான அதவாது ஆதார் அட்டை, பாஸ்போர்ட், டிரைவிங் லைசென்ஸ், ரேஷன் கார்டு, வாக்காளர் அட்டை மற்றும் பான் கார்டு (Pan card) ஏதாவது ஒன்றை ஏலத்தில் கலந்து கொள்ளும்போது கொண்டு வர வேண்டும்.
11. விற்பனை சான்றிதழ் ஏலம் எடுத்தவர் பெயரில் மட்டுமே பதிவு செய்து கொடுக்கப்படும் வேறு நபர்கள் பெயரில் கண்டிப்பாக கொடுக்கப்பட மாட்டாது. விற்பனை பத்திரத்தை பதிவு செய்ய பத்திர கட்டணம், முத்திரை கட்டணம் மற்றும் அதற்கு தொடர்புடைய பிற அரசாங்க கட்டணங்கள், வரி முதலியவற்றை ஏலம் எடுத்த நபரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
12. ஏலத்தில் வெற்றி பெற்றவர் / கொள்முதல்தாரர் அவர்களுக்கு வருமானவரி சட்டம் 1961, பிரிவு 194 1A-ன் படி விற்பனை விலையில் 1% TDS கழித்து செலுத்த வேண்டும் மற்றும் அதனை செலுத்தியதற்கான படிவம் 26 QB உடன் ரசீது மற்றும் TDS அசல் சான்றிதழை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். (50.00 லட்சத்திற்கு மேல் உள்ள சொத்திற்கு)
13. மேலும் இந்த விற்பனை அறிவிப்பு www.tmb.in என்ற இணையதளத்தில் பதிவேற்றும் / பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**இடம் : மதுரை**
**தேதி : 17.10.2023**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
**தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்,**
**மண்டல அலுவலகம், மதுரை.**
**[நாகமலை புதுக்கோட்டை கிளைக்காக]**

**ஏல விற்பனை அறிவிப்பு பெறுபவர்களின் முகவரி:**

**கடன்தாரர்கள்**

**திரு.V.ஜெகன், த/பெ.C.விருமாண்டி,**
கதவு எண். 3/179A, புதிய எண். 3/177, பல்கலை நகர், நாகமலை புதூர்.
வடபழஞ்சி கிராமம். மதுரை - 625 021

**திரு.V.அன்னலெட்சுமி க/பெ.C.விருமாண்டி,**
கதவு எண். 3/179A, புதிய எண். 3/177, பல்கலை நகர், நாகமலை புதூர்.
வடபழஞ்சி கிராமம், மதுரை - 625021